www.noolaham.org www.noolahamfoundation.org

புதிய நூலகம்

இதழ் 14 15-08-2012

கலை இலக்கியப் பதிவுகள்

இணையத்தில் அ. முத்துலிங்கம் கதைகள்

எழுத்தாளர் அ. முத்துலிங்கம் கதைகள் ஏற்கனவே தொகுப்பு நூலாக வந்துள்ளன. அவை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் மேலும் இரண்டு வடிவங்களை எடுத்திருக்கின்றன.

ஒன்று: சும்மா காதில் மாட்டிவிட்டுக் கதைகேட்பதற்கு ஒலிப்பதிவாக வந்துள்ளது. பாடல் கேட்பதுபோல் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து கதை கதையாகக் கேட்கலாம். அதனைப் பின்வரும் சுட்டியினூடாகச் சென்று தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.
http://www.youtube.com/user/Tamilliterarygarden

மற்றையது: எண்ணிம நூலாக வந்துள்ளது. கணனியில் இருந்து வாசிப்பதற்கு ஏற்ப தனியே வடிவமைத்திருக்கிறார்கள்.. பி.டி.எப் கோப்பாகத் தரவிறக்கம் செய்து வாசிக்கலாம். நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) முத்துலிங்கத்தின் நூல்களை வாசிக்கலாம்.

சிறுவர் பாடல் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு

அல்வாயூர் மா . அனந்தராசனின் ***சின்னத்தம்பி வாடா*** என்ற சிறுவர் பாடல்கள் அடங்கிய இறுவெட்டு வெளியீட்டுவிழா 26.05.2012 அன்று கொற்றாவத்தை செட்டிதறை சித்திவிநாயகர் ஆலய மணிமண்டபத்தில் இடம்பெற்றது. வடமராட்சி கலை இலக்கிய சுவைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு ஆசிரியர் தி. சுபாகரன் தலைமை தாங்கினார்.

வெளியீட்டுரையை இராஜேஸ்கண்ணனும் நயப்புரைகளை இயல்வாணன், குணேஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்தினர். பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வாழ்த்துரைகளை கொற்றை பி. கிருஷ்ணானந்தன், அதிபர் கி. இராசதுரை, செ. சதானந்தன், பருத்தித்துறை கலாசார உத்தியோகத்தர் செல்வசுகுணா ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை ஆசிரியர் வீ. வீரகுமார் நிகழ்த்தினார்.

ஆறு பாடல்களைக் கொண்ட இந்த ஒலிநாடாவில் மா. அனந்தராசன், செல்விகள் வீ. துஷியா, வை. வைஷ்ஷாளினி, வை.வைஷ்மினி ஆகியோர் பாடியுள்ளனர். எஸ். திருக்குமரன் (கீபோட்), எஸ். சேதுராஜ் (தபேலா), க. குருபரன் (ஒலிப்பதிவு) ஆகிய இளைஞர்களின் முயற்சியும் பாராட்டத்தக்கது.

காவியமாய் நெஞ்சின் ஓவியமாய் நூல் அறிமுகம்

பருத்தித்துறை அறிவோர் ஒன்றுகூடலில் புலோலியூர் இரத்தினவேலோனின் ***காவியமாய் நெஞ்சின் ஓவியமாய்*** என்னும் சிறுகதைத்தொகுதி அறிமுக நிகழ்வு 01.07.2012 அன்று இடம்பெற்றது.

நிகழ்வுக்கு இலக்கியச்சோலை து. குலசிங்கம் தலைமை தாங்கினார். ஆ. கந்தையா ஆசிரியர் வெளியீட்டுரை நிகழ்த்தினார். கொற்றை பி. கிருஷ்ணானந்தன், இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினர்.

விஜயன் விக்னேஸ்வரனின் 'சித்ரா' குறும்படம்

விஜயன் விக்னேஸ்வரன் இயக்கிய ***சித்ரா*** என்ற குறும்படம் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான விருதினைப் பெற்றுள்ளது. மிக எளிமையான ஒரு கதைக்கூறு நேர்த்தியாக ப் படமாக்கப்பட்டுள்ளது.

தனது செல்லமகளை ஏற்கனவே இழந்துவிட்ட தந்தை அந்த அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் இருப்பதுதான் படத்தின் கதை. (6.46 நிமிடம்) படம் இறுதிக் கட்டத்தைத் தாண்டும்வரையும் இந்த அம்சம் சொல்லப்படவேயில்லை. வித்தியாசமான அனுபவத்தைத் தரும் குறும்படம். இணையத்தில் யாரும் பார்க்கமுடியும். http://www.nizhal.in

'பருத்தித்துறையூராம்' நூல் வெளியீடு

நாடக எழுத்துருக்களைத் தந்த நன்கு அறியப்பட்ட பா. இரகுபரனின் ***பருத்தித்துறையூராம்*** என்ற நூல் வெளிவந்துள்ளது. இது பருத்தித்துறை நகர் பற்றிய சமூகவியல் வரலாற்று ஆவணமாக்கல், ஆய்வு முன்னோடி நூல் என்றும் குறிப்பிடப்படுகிறது.

வடமராட்சியில் எமது பண்பாட்டு எச்சங்களை கொஞ்சமாகவேனும் இன்னமும் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கும் பழம் பெருமை வாய்ந்த ஊர்களிலே பருத்தித்துறையும் குறிப்பிடத்தக்கது. அது பற்றிய தகவல்களைப் படங்களுடன் எடுத்துக் காட்டுகிறது மேற்படி நூல்.

இதன் வெளியீட்டுவிழா 29.07.2012 அன்று ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் இடம்பெற்றது.

- சு. குணேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவிலிருந்து

சு. வில்வரெத்தினம்

சு. வில்வரெத்தினம் (1950 - டிசம்பர் 9, 2006) 1970 களிலே எழுத ஆரம்பித்து 1980 களில் முக்கியமான எழுத்தாளராகப் பரிணமித்தவர். சு.வி என்ற பெயரால் அறியப்படுபவர்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வில்வரெத்தினம், ஈழத்தின் இலக்கிய சிந்தனையாளராகிய மு. தளையசிங்கத்தின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக ***உயிர்த்தெழும் காலத்துக்காக*** என்ற தொகுதியாக 2001 இலே வெளியானது. ***மரணத்துள் வாழ்வோம்*** தொகுதியிலேயும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. *Lutesong and Lament: Tamil Writing from Sri Lanka* தொகுதியிலே இவரது கவிதை ஒன்று ஆங்கில வடிவிலே வெளிவந்துள்ளது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியான பற்றுக்கொண்ட கவிஞரான இவர் தனது கவிதைகளில் அதற்கே முதன்மை இடத்தை வழங்கி வந்தார்.

இவரது காற்றுவழிக் கிராமம் என்னும் கவிதைத் தொகுதி விபபி சுந்திர இலக்கிய அமைப்பின் 1995 ஆம் ஆண்டிற்கான சிறந்த கவிதை நூலுக்கான விருதினைப் பெற்றுக் கொண்டது. இவர் கவிதைகளையும் பாடல்களையும் சிறப்பாகப் பாடும் வல்லமை பொருந்தியவரும்கூட.

வில்வரெத்தினம் இடம்பெயர்ந்து 1991 ஆம் ஆண்டு முதல் திருகோணமலையில் வாழ்ந்து வந்தார். அங்குள்ள கல்வித் திணைக்களத்தில் பணியாற்றினார். இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த வில்வரெத்தினம் அவர்கள் கொழும்பில் டிசம்பர் 9, 2006 அன்று தனது 56 வது வயதில் காலமானார்.

வெளிவந்த நூல்கள்

அகங்களும் முகங்களும் (கவிதைத் தொகுதி, 1985)
காற்றுவெளிக் கிராமம் (கவிதைத் தொகுதி, 1995)
காலத்துயர் (கவிதைத் தொகுதி, 1995)
நெற்றிமண் (கவிதைத் தொகுதி, 2000)
உயிர்த்தெழும் காலத்துக்காக (கவிதைத் தொகுதி, 2001)
வாசிகம் (2006)

புதிய நூலகம்

இதழ் 14

15-08-2012

ஆசிரியர்
சு. குணேஸ்வரன்

இது ஒரு நூலக நிறுவன வெளியீடு
noolahamfoundation@gmail.com

புதிய நூலகம் இதழின் உள்ளடக்கம் அனைத்தும் நூலக நிறுவனத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக இருக்குமென்றில்லை. வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கள் கட்டுரையாளர்களுடையவை. புதிய நூலகம் இதழுக்கென எழுதப்படும் உள்ளடக்கம் Attribution-ShareAlike 3.0 Unported (CC BY-SA 3.0) உரிமத்துடன் வெளியாகின்றது. மறுபதிப்புக்கள் அவற்றின் மூலப்பிரதியின் உரிமத்துடன் வெளியாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிம ஆவணப்படுத்தல்

- கோபி -

எண்ணிம ஆவணப்படுத்தல்

தகவல் வளங்களைக் (Information sources) கணினி போன்றதொரு எண்ணிம சாதனத்தின் உதவியுடன் பயன்படுத்தக் கூடியவகையில் எண்ணிம வடிவங்களில் (Digital formats) பதிவு செய்தலும் அதனுடனினைந்த செயற்பாடுகளும் எண்ணிம ஆவணப்படுத்தல் ஆகும்.

அச்சு வடிவ ஆவணங்களைப் படங்களாக மின்வருடிக் கணினியில் சேமித்தல், தட்டெழுதிச் சேமித்தல், ஒலி-ஒளி நாடாக்களை இறுவட்டுக்களுக்கு மாற்றுதல் போன்றவை எண்ணிம ஆவணப்படுத்தற் செயற்பாடுகள் ஆகும்.

எண்ணிம ஆவணப்படுத்தல் இரு வகைப்படும்.
1. எண்ணிம வடிவங்களில் இல்லாத வளங்களை எண்ணிம வடிவங்களில் ஆவணப்படுத்துதல். அச்சில் வெளிவந்த நூல்களை மின்வருடி மின்னூல்களாக்குதல் போன்ற செயற்பாடுகள் இவ்வகையில் அடங்கும்.
2. எண்ணிம வடிவங்களில் உருவாகிய இயல்பு எண்ணிம (born digital) வளங்களை ஆவணப்படுத்துதல். விரிதாள்கள் (spreadsheets), தரவுத் தளங்கள் (databases), வலைத்தளங்கள் போன்றவற்றினை ஆவணப்படுத்துதல் இவ் வகையிலுள் அடங்கும்.

எண்ணிம ஆவணப்படுத்தலின் பயன்பாடுகள்

இயல்பு எண்ணிம ஆவணங்களை எண்ணிம வடிவங்களில் பாதுகாப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அத்தகைய தகவல் வளங்கள் நாளுக்கு நாள் உருவாகிவரும் நிலையில் எண்ணிம ஆவணப்படுத்தல் என்பது ஒவ்வொரு நிறுவனமும் தனியாளும் கவனத்தில் எடுக்க வேண்டியதாகியுள்ளது. ஏனெனில் அவற்றினைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பது அவசியமானது.

எண்ணிம ஆவணப்படுத்தலின் பயன்பாடுகள் வருமாறு

1. அதிகரித்த அணுக்கம் (Increased access) - எண்ணிம வடிவங்களில் உள்ள ஆவணங்கள் வலைத்தளங்களூடாகப் பகிரப்படுகையில் ஒரே நேரத்தில் எத்தனை பேர் வேண்டுமென்றாலும் பயன்படுத்த முடியும். எந்த நேரத்திலும் எங்கிருந்து வேண்டுமென்றாலும் இணைய இணைப்பினூடாகக் குறித்த ஆவணங்களைப் பெற முடியும். தேடல் (searching), உலாவல் (browsing) ஆகிய நுட்பங்களைப் பயன்படுத்துவதனால் மிக வேகமான ஆவண அணுக்கம் சாத்தியமாகிறது. இது ஆவணங்களின் பயன்பாட்டினைப் பன்மடங்கு ஆக்குகிறது.

2. ஆவணப் பாதுகாப்பு (preservation) - அழிவாபத்தில் உள்ள ஆவணங்களை எண்ணிம வடிவங்களில் பாதுகாக்க முடியும். ஓரிரு பிரதிகள் எஞ்சியுள்ள ஆவணங்கள், மிகப்பழைய ஆவணங்கள் போன்றவற்றினை எண்ணிம வடிவங்களில் பிரதி செய்து பயன்படுத்துவது மூலப்பிரதிகள் பாதிப்படைவதனைத் தவிர்க்கிறது. மூலப்பிரதிகள் அழிந்தாலும் எண்ணிமப் பிரதிகளைத் தொடர்ந்தும் பயன்படுத்த முடிவதோடு புதிய பிரதிகளை உருவாக்கவும் முடியும். இடவசதியின்மை போன்ற காரணங்களால் நூலகங்களிலிருந்து வள நீக்கம் செய்யப்படும் ஆவணங்களையும் எண்ணிம வடிவங்களில் பாதுகாக்க முடியும்.

3. நுட்பப் பயன்பாடு - எண்ணிம ஆவணங்களின் நுட்பச் சாத்தியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. தேடல், உலாவல் ஆகிய நுட்ப வசதிகள் கல்வி, ஆய்வுச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதோடு வினைத்திறனுடைய தாக்குகின்றன. சொற் களஞ்சிய உருவாக்கம், அகரமுதலி தயாரிப்பு, தரவுத்தளங்கள், மெய்நிகர் கல்விச் சூழல்கள், கலைக்களஞ்சிய உருவாக்கம் போன்ற செயற்பாடுகள் எளிதில் சாத்தியமாகின்றன. அறிவுச் செயற்பாடுகள் சிறிய வட்டங்களுள் தடைப்படாமல் அனைத்துத் தரப்பினருக்கும் சாத்தியமாகிறது.

எண்ணிம ஆவணப்படுத்தலும் பாதுகாத்தலும்

ஏனைய வடிவங்களில் உள்ள ஆவணங்களை எண்ணிம வடிவங்களுக்கு மாற்றிச் சேமிப்பதாலும் இயல்பு எண்ணிம ஆவணங்களைச் (born digital documents) சேகரித்து வைப்பதாலும் அவற்றினை நிரந்தரமாகப் பாதுகாத்துவிட முடியாது. அச்சு ஆவணங்களுடன் ஒப்பிடுகையில் எண்ணிம ஆவணங்களின் பயன்பாட்டுச் சாத்தியங்கள் மிக அதிகம். அதேவேளை எண்ணிம ஆவணங்கள் அழிவடையும் அல்லது பயன்படுத்தமுடியாத நிலையை அடையும் வாய்ப்புக்கள் அதிகம் என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

1. வன்பொருட்கள் சார்ந்த பாதிப்புக்கள் : கணினி வன் தட்டுக்கள், இறுவட்டுக்கள் போன்றவை எளிதில் பாதிப்படையக் கூடியவை. கணினி வன் தட்டுக்கள் திடீரென ஒரு நாள் பயன்படுத்த முடியாததாகி விடும். கால ஓட்டத்தில் புளொப்பி டிஸ்குகள் பயன்படுத்த முடியாதவையாகியமை ஓர் எடுத்துக்காட்டு. இயற்கை அழிவுகள், விபத்துக்கள் போன்றவற்றாலும் சேமிப்பகங்கள் அழியலாம். வைரஸ் தாக்குதல், வேண்டுமென்றே அழித்தல், திருட்டு போன்ற மனித செயற்பாடுகளாலும் எண்ணிமப் பதிவுகள் அழியலாம். போதிய கவனமின்மையால் வழங்கிகளைப் புதுப்பிக்கா திருத்தல் போன்றவை எளிதில் இணையத் தளங்கள் அழியக் காரணமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகளைப் பேணுதல், காலத்துக்குக் காலம் காப்புப்படி (back up) எடுத்தல், வெவ்வேறு இடங்களில் காப்புப் படிகளைச் சேமித்தல், சேமிப்பகங்களை இற்றைப்படுத்துதல் போன்ற தொடர்ச்சியான செயற்பாடுகள் மூலம் இச்சிக்கலைத் தவிர்க்க வேண்டும்.

2. மென்பொருள் சார்ந்த மாற்றங்கள் - கணினி பரவலாகத் தொடங்கிய காலங்களில் அறிமுகமான பெருமளவு மென்பொருள்கள் இப்போது பயன்பாட்டில் இல்லை. அக்காலங்களில் உருவாகிய பெருமளவு கோப்புக்கள் (files) இப்போது சரியாகப் பயன்படுத்த முடியாதவையாகி விட்டன. தமிழில் பயன்பட்ட ரிஸ்கி போன்ற எழுத்துக்களில் உருவாகிய ஆவணங்களிலிருந்து இப்போது முழுப்பயன் பெற முடியாது.

காலத்துக்குக் காலம் தேவைக்கேற்ப கோப்பு வடிவங்களை மாற்றுதலும் இற்றைப்படுத்துதலும் இச்சிக்கலைத் தவிர்க்க உதவும்.

கவனிக்க வேண்டியவை

* எண்ணிம ஆவணப்படுத்தற் செயற்பாடுகளில் எவற்றை ஆவணப்படுத்துவது, எவற்றினைத் தவிர்ப்பது என்பது தொடர்பான முடிவுகள் மிக முக்கியமானவை. குறிப்பாக இயல்பு எண்ணிம ஆவணங்களும் மின்வருடிய பின்னர் மூலப்பிரதிகள் அழிக்கப்பட்ட ஆவணங்களும் தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்படாவிடின் ஒரேயடியாக அழிந்து போய்விடும். அவ்வகையில் ஆவணங்களின் எதிர்காலத் தேவை, பெறுமதி போன்றவை கருத்திற் கொள்ளப்படலாம். இது தொடர்பிலான சேகர முகாமைத்துவக் கொள்கை (collection management policy) ஆவணப்படுத்தற் செயற்பாடுகளில் இன்றியமையாத ஒன்றாகும்.

* எண்ணிம வடிவங்களுக்கு மாற்றுவதானது பயன்பாட்டுக்குப் போதுமானதல்ல. பயன்பாட்டுக்குக் கிடைக்காத ஆவணங்களும் அழிந்தவையாகவே கருதப்பட முடியும். தேவையான வளங்களைத் தேவைப்படும் நேரத்தில் இலகுவாகத் தேடி உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் அவசியமானவை ஆகும். அடைவுகளைச் (folders) சீராகப் பெயரிட்டுப் பேணுதல், உள்ளடக்க முகாமைத்துவத் தொகுதிகளைப் (content management systems) பயன்படுத்துதல், விபரத் தரவுகளைப் (meta data) பேணுதல் போன்ற ஒழுங்குகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். சேகரத்தின் அளவு அதாவது ஆவணங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். யார் எந்த ஆவணங்களைப் பயன்படுத்தலாம் என்பது தொடர்பான அணுக்கக் கட்டுப்பாடும் (Access control) தேவைப்படலாம்.

* அச்சு போன்ற வடிவங்களிலிருந்து எண்ணிம வடிவங்களுக்கு ஆவணங்களை மாற்றுகையில் அது எவ்வளவு காலத்துக்கான ஆவணப்படுத்தல் என்பது தொடர்பில் தெளிவாக இருப்பது அவற்றுக்குரிய நுட்பங்களைச் சரியாகத் தெரிவு செய்ய உதவும். குறுகிய காலத் தேவைகளுக்கான ஆவணப்படுத்தலின் போது அதியுச்ச தரத்தினைப் பேண வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக நிறுவனங்களின் கணக்குப் பதிவுகள் போன்றவை 7 முதல் 10 ஆண்டுகளுக்கே தேவைப்படும். அதேவேளை நூலகங்களில் அரிய ஆவணங்களைப் பதிவு செய்கையில் எக்காலத்திலும் பாதுகாக்கக்கூடிய வகையில் மிகச் சிறந்த நியமங்களையும் கருவிகளையும் பயன்படுத்த வேண்டும்.

* ஆவணப்படுத்தல் சார்ந்த முடிவுகளில் நிதிநிலையும் முக்கிய செல்வாக்குச் செலுத்துகிறது. குறைந்த எண்ணிக்கையான ஆவணங்களைப் பாதுகாக்க அதிக பொருட்செலவில் கருவிகளை வாங்கிப் பயன்படுத்துவது சாத்தியமில்லை. அவ்வகையில் நிறுவனத்திற்குள்ளேயே எண்ணிமமாக்கம் போன்றவற்றைச் செயற்படுத்துவதா வேறு நிறுவனங்களின் சேவைகளைப் பயன்படுத்துவதா என்பதான முடிவுகள் நிறுவன வளங்கள் சார்ந்தே எடுக்க வேண்டியவையாக உள்ளன. எத்தகைய சேமிப்பகங்களைப் பயன்படுத்துதல், எத்தனை காப்புப் படிகளைப் பராமரித்தல் போன்ற முடிவுகளும் நிதிநிலை சார்ந்தே திட்டமிட வேண்டியவையாக உள்ளன.

* சட்டச் சிக்கல்கள் ஆவணப்படுத்தலில் அவசியம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. எடுத்துக்காட்டாக நூலகங்கள், ஆவணகங்கள் போன்றவை எண்ணிமப் பிரதிகளை உருவாக்கும்போது பதிப்புரிமை தொடர்பில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். பதிப்புரிமையின் கீழுள்ள ஆவணங்களை ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் எடுத்தல், இணையத்தில் பகிர்தல் போன்றவற்றுக்கு பதிப்புரிமையாளரது உரிம அனுமதிகள் தேவைப்படும்.

இணையத்தில் நூல் தேட்டம்

ஈழத் தமிழ் நூல்களின் குறிப்புரையுடன் கூடிய விரிவான நூல் விபரப் பட்டியலான நூல் தேட்டம் இப்பொழுது இணையத்தில் www.noolthettam.com என்ற முகவரியில் கிடைக்கிறது.

நூலகர் ந. செல்வராஜா முயற்சியில் இதுவரை 8,000 ஈழத்துத் தமிழ் நூல்களின் விபரங்கள் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ஆங்கிலத் தொகுப்பொன்றும் வெளியாகியுள்ளது. இவை அனைத்தும் பி.டி.எப் கோப்புக்களாக தரவிறக்கி வாசிக்கக் கூடியதாக வெளியிடப்பட்டுள்ளன.

அத்துடன் நூல் தேட்டத் தொகுதிகளின் ஒரு பகுதியைத் தேடும் வசதியும் இணைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் ஆசிரியர் பெயரினைத் தெரிவு செய்தும் தூவி பகுப்புக்களைத் தெரிவு செய்தும் நூல் விபரங்களைப் பெறலாம். அத்துடன் நூற்பெயர், ISBN எண் ஆகியவற்றைக் கொண்டும் தேடக் கூடியதாக உள்ளது. நூல் தேட்டம் தொகுதிகள் அனைத்திலும் தேடும் வசதி இற்றைப்படுத்தப்படுகையில் இந்த வலைத் தளத்திலிருந்து அதியுச்ச பயன் பாட்டினைப் பெற முடியும்.

-கோபி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தில் ஓர் ஈழத் தமிழ் நூலகம்

லெ. முருகபூபதி

இலங்கையில் வாழ்ந்த காலப்பகுதியில் சிறிது காலம் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தில் ***கலைக்கோலம்*** நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவதற்காக வாரத்தில் ஒரு தடவை செல்வதுண்டு. அக்காலத்தில் அரச ஊடகங்களில் குறிப்பாக இலங்கை வானொலியில் ஈழம் என்ற சொல்லைப் பாவிக்க முடியாதிருந்தது. ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்று தொடங்கும் வசனங்களையெல்லாம் இலங்கை இலக்கிய வளர்ச்சி என்றே திருத்தி வாசிக்க வேண்டும். அத்துடன் சாதி என்ற சொல்லும் வந்துவிடக்கூடாது. எழுத்தாளர் கே.டானியல் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் மறைந்ததையடுத்து கலைக்கோலம் நிகழ்ச்சியில் அவர் பற்றிய ஓர் அஞ்சலிக்கட்டுரையை வாசிக்க வந்தவர் தற்போது தினக்குரல் பிரதம ஆசிரியராகப் பணியாற்றும் நண்பர் தனபாலசிங்கம். டானியல் யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிக்கொடுமைகளுக்கு எதிராகப் போராடிய ஒரு போராளியாகவும் படைப்பிலக்கியவாதியாகவும் வாழ்ந்தவர். அவர் பற்றிய அஞ்சலிக்கட்டுரையில் ***சாதி*** என்ற சொல் பந்திக்குப் பந்தி இருந்தது. ஒலிப்பதிவு கூடத்தில் கலைகோலம் நிகழ்ச்சியைப் பதிவு செய்யத் தொடங்கியப் போது மேலிடத்திலிருந்து அவசர உத்தரவு வந்தது. சாதி என்ற சொல்லை நீக்கிவிட்டு வேறு சொல்லை பாவிக்குமாறு அந்த உத்தரவு எம்மைப் பணித்தது. மின்னலென ஒரு யோசனை உதித்தது. ***அடிநிலை மக்கள்*** என்று மாற்றினோம். இந்தத் தகவல்களை கடந்த 2011 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இறுதி நாளன்று நடைபெற்ற படைப்பில் செவ்விதாக்கம் என்ற கருத்தரங்கு அமர்வில் உரையாற்றும் போது குறிப்பிட்டேன். அந்த அரங்கில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்த இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தமிழ்ச்சேவை பணிப்பாளராக கடமையாற்றிய நண்பர் திருஞானசுந்தரம் மென்மையான புன்னகையை உதிர்த்தவாறு கேட்டுக்கொண்டிருந்தார்.அவரது காலப்பகுதியில் அவர் அங்கே தமிழ் நிகழ்சிகளைப் பொறுத்தவரையில் கத்தியின் மேல் நடந்து கொண்டிருந்தார். இலங்கையில் தமிழ் ஊடகங்களில் பணியாற்றும் பலரது நிலைமை அன்றும் அப்படித்தான் என்பதை சுட்டிக்காட்டுவதற்கே இந்தத்தகவல்களை இங்கு பதிவுசெய்கிறேன்.

ஈழம் என்றவுடன் பேரினவாதிகளுக்கு ஏனோ கலக்கம் வந்துவிடுகிறது. இலங்கையின் மற்றுமொரு பெயர் தான் ஈழம் என்பது அவர்களுக்கு ஏனோ புரியவில்லை. இந்த கணினியுகத்தில் ஈழத்தை தணிக்கை செய்ய முடியாது. ஈழத்து இலக்கியம், ஈழத்து எழுத்தாளர் முதலான சொற்பதங்களைத் தாராளமாகப் பாவிக்கலாம். இந்த ஆக்கத்தில் இணையத்தில் ஈழத்துத் தமிழ் நூலகம் பற்றி பதிவுசெய்ய விரும்புகின்றேன். 2011 ஆம் ஆண்டு மெல்பனில் நடந்த பதினொராவது தமிழ் எழுத்தாளர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காக மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்திலிருந்து நண்பர் கோபி வந்திருந்தார். அவரது உரையில் அவரும் அவருடன் வேறு சிலரும் இணைந்து ஆரம்பித்த எண்ணிம ஆவணக் காப்பகமான இணையத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்துத் தமிழ் நூலகம் பற்றி விரிவாக குறிப்பிட்டார். விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு பயனுள்ள தகவல்கள் அடங்கிய பிரசுரங்களையும் விநியோகித்தார். உலகமே ஒவ்வொரு காலடியிலிருந்து தான் இயங்கத் தொடங்கியிருக்கிறது. மக்கள் நலன் சார்ந்த ஒவ்வொரு சமூகப்பணியும் எவராவது ஒருவரது தனிப்பட்ட அல்லது சிலரது கூட்டு முயற்சியில் தான் ஆரம்பமாகியிருக்கிறது. தீர்க்கதரிசனம் மிக்க எந்தவொரு ஆக்கபூர்வமான பணியும் முதலில் பாதகமான விமர்சனங்களை உள்வாங்கிக் கொண்டு தான் தனது காலடிகளை பதிக்கத்தொடங்கும்.

யாழ். பொது நூலக எரிப்பு ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் அறிவுலகத்திற்கும் மறக்க முடியாத பேரிழப்புத் தான். வெட்ட வெட்ட தழைக்கும் வாழை போன்று எந்த அழிவு வந்தாலும் வாழ்ந்து காட்டுவோம் என்று புகலிட நாடுகளிலெல்லாம் தமிழுக்காக பணி செய்துவருபவர்கள் ஈழத்தமிழர்கள் தான் என்று தமிழகத்தவர்களால் வியந்து போற்றுப்படுபவர்கள் மத்தியில் வாழும் கோபி உட்பட மேலும் சிலர் தொடரும் அயராத முயற்சியே இந்த எண்ணிம ஆவணக்காப்பகம். சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் தனது ஏழாவது ஆண்டு நிறைவை இந்த காப்பகம் சிறப்பான முறையில் கொண்டாடியிருக்கிறது. இலங்கை தேசிய சிறுபான்மையினத்தவர்களின் நண்பராகத் திகழும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்ட நிகழ்விற்கு வருகைதந்து இந்த இணைய நூலகத்தின் பணிகளையும் முயற்சிகளையும் மனந்திறந்து பாராட்டியுள்ளார்.

1887 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் வெளியான அரிய பல வெளியீடுகள் இந்த இணைய ஆவண காப்பகத்தில் பதிவாகியுள்ளன. உலகில் எந்தப்பகுதியிலும் வாழும் ஒரு தமிழ் வாசகன் தனது கணினிக்கு முன்னமர்ந்து www.noolaham.org என்ற எழுத்துக்களைத் தட்டினால் சகல விபரங்களும் உயிர்பெற்று வரும். உலகெங்கும் பரந்து வாழும் நூற்றுக்கணக்கான தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியே இந்த நூலக வலைத்தளம். நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், சிறுபிரசுரங்கள், நினைவுமலர்கள், விழா மலர்கள், ஆய்விதழ்கள், பாடசாலை மலர்கள், கல்வெட்டுக்கள் உள்ளிட்ட சகலவிதமான தமிழ் எழுத்தாவணங்களும் இந்த வலைத்தளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வலைத்தளம் பற்றிய சிறு பிரசுரம் பின்வரும் தகவல்களைத் தரிவிக்கின்றது:-

1. **தமிழில் சமகால அறிவு பகிரப்படும் மிக முக்கிய வலைத்தளங்களில் ஒன்று.**
2. **தமிழின் மிகப் பெரும் இணைய எண்ணிம நூலகம்.**
3. **எதுவித இலாப நோக்கங்களும் இல்லாத கூட்டு முயற்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 2005 தைப்பொங்கலன்று தொடங்கப்பட்டது.
5. நூலக நிறுவனத்தின் (www.noolaham foundation.org) ஒரு செயற்றிட்டம்.

பயன்கள்

1. எமது வரலாறு, இலக்கியம், மொழி, பண்பாடு, சமயங்கள், கலைகள், நாட்டார் வழக்காறுகள் உள்ளிட்ட அனைத்தும் ஆவணப்படுத்தப்படுகின்றன.
2. அழியும் நிலையிலுள்ள எழுத்தாவணங்கள் அடுத்த தலைமுறைகளுக்கு கிடைக்கும் வண்ணம் பாதுகாக்கப்படுகின்றன.
3. ஆய்வாளர்களும் ஆய்வு மாணவர்களும் வினைத்திறனுடன் ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ள முடிகிறது.
4. பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் கல்விசார் வளங்களைப் பெற்றுகொள்ளமுடிகிறது.
5. சமூக முன்னேற்றத்துக்கான செயற்பாட்டாளர் களுக்குத் தேவையான தகவல்களை இலகுவில் திரட்ட முடிகிறது. தேவையான தகவல்களை அடையாளங் காண முடிகிறது.
6. ஈழத்து எழுத்தாளர்களும் அவர் தம் படைப்புக்களும் உலகளாவிய அளவில் அறிமுகம் பெறுகின்றனர்.
7. கிடைத்தற்கரிய ஆவணங்களை உலகின் எந்த இடத்தில் வாழ்வோரும் எந்நேரமும் பெற்றுப் பயன்பெற முடிகிறது.

பங்களிப்பது எப்படி?

1. இது ஒரு தன்னார்வக் கூட்டு முயற்சி. ஆர்வமுள்ள எவரும் பங்குபெறலாம்.
2. எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், இதழாசிரியர்கள் தமது வெளியீடுகளை எண்ணிமமாக்கும் அனுமதியுடன் அனுப்பலாம்,
3. நூலக வலைத்தளத்தில் நேரடியாக எழுத்தாவணங்கள் தொடர்பான தகவல்களைச் சரிபார்த்தும் இணைத்தும் தளத்தின் உள்ளடக்கத்தை விரிவாக்கலாம்.
4. இணையத்தில் கிடைக்கும் மின்னூல்களுக்கான புதிய விபரப்பக்கங்களைத் தொடங்கலாம்.
5. நூலக வலைத்தளத்தை பரவலாக அறிமுகப்படுத்தி அதன் பயன்பாட்டை அனைவருக்கும் கிடைக்கச்செய்யலாம்.
6. நூலகத்தளம் தொடர்பான உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகளைத் தெரியப்படுத்தலாம்.
7. நூலக நிறுவனச்செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கலாம்.

மேலும் சில குறிப்புகள்

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்குத் தேவையான அறிவினையும் தகவல்களையும் கிடைக்கச் செய்வதில் நூலகங்களின் பங்கு மிக முக்கியமானது. ஒரு நூலகம் அதன் வாசகர்களுக்குத் தேவையான போதிய தகவல் வளங்களைக்கொண்டிருக்கும் போதே அதிலிருந்து உச்சப்பயனைப் பெறமுடியும். பொருத்தமான விதத்தில் ஆவணப்படுத்தப்படாத பெருமளவு நூல்களும் சிறுவெளியீடுகளும் ஏட்டுச்சுவடிகளும் என்றென்றைக்கும் மீண்டும் பெறமுடியாதவையாக அழிந்து போய்விட்டன. எஞ்சியுள்ள பலவும் பலவும் அழிவாபத்தை எதிர்நோக்குகின்றன. எண்ணிமமாக்கல் நுட்பம் இத்தகைய அழிவுகளிலிருந்து ஆவணங்களைப் பாதுகாப்பதைச் சாத்தியமாக்குகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் மனம் வைத்தால் நூலக முயற்சி மென்மேலும் பயன்மிக்கதாகும். நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ஆவணமும் ஆலோசனையும் பங்களிப்பும் அவ்வகையில் மிக மிக முக்கியமானது.

எண்ணிம நூலகங்கள்

1. ஏதாவது ஓரிடத்தில் நிறுவப்படும் நூலகத்தினை அப்பிரதேசத்திலோ அந்நாட்டிலோ வாழ்பவர்களால் அந்நூலகம் திறந்திருக்கும் நாட்களில் மட்டுமே பயன்படுத்த முடியும் ஆனால், ஓர் இணைய எண்ணிம நூலகத்தை எந்நாட்டிலிருந்தும் எந்நேரமும் பயன்படுத்த முடியும்.

2. ஓர் எண்ணிம நூலகத்தில் தேவையான தகவல்களை இலகுவாகவும் வேகமாகவும் தேடி உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

3. அழிவாபத்தை எதிர்நோக்கும் அரிய வெளியீடுகளைப் பாதுகாத்து அடுத்த தலை முறைகளுக்கும் கிடைக்கச் செய்யச் சிறந்த வழி அவற்றை மின்னூல்களாக்கிப் பாதுகாப்பதே ஆகும்.
4. ஓரிரு பிரதிகளே எஞ்சியுள்ள ஆவணங்களையும் மிகப்பழைய ஆவணங்களையும் மூலப்பிரதி மேலும் பாதிப்படையாத விதத்தில் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கான சிறந்த வழி எண்ணிம ஆவணப்படுத்தலாகும்.

நூலக நிறுவனம்

1. சமூக மட்டத்தில் எண்ணிம ஆவணப்படுத்தல், தகவல் அறிதிறன், எண்ணிம நூலகங்கள் போன்றவை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கிறோம்.
2. எண்ணிமமாக்க முயற்சிகளுக்கும் ஆவணப்படுத்தல் முயற்சிகளுக்கும் நிதியுதவி, ஆலோசனை வழங்குகிறோம்.
3. தமிழில் வெளிவந்த தமிழரால் எழுதப்பட்ட தமிழ் எ தமிழர் தொடர்பான வெளியீடுகளில் இணையத்தில் கிடைக்கும் அனைத்தையும் ஓரிடத்தில் தேடியடையக்கூடிய வகையில் பதிவுசெய்கிறோம்.
4. மாணவர், ஆய்வாளர், சமூகச் செயற்பாட்டாளர், எழுத்தாளர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் ஆவணப்படுத்தல் முயற்சிகளில் ஈடுபடுகிறோம்.

நூலகம் 10,000 நிகழ்வு

இணையத்தில் ஓர் ஈழத்துத்தமிழ் நூலகத்தை உருவாக்கியவர்கள் மேற்கொண்ட அரிய முயற்சிகளை மேலே பதிவுசெய்யப்பட்ட சிறு பிரசுரத்தகவல் தெளிவுபடுத்துகிறது. நூலகம் வலைத்தளம் தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவடைந்து எட்டாவது ஆண்டில் தொடர்ந்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது என் போன்ற படைப்பாளிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் வரப்பிரசாதமாகும். சுமார் ஏழு ஆண்டு காலத்துள் நூலக வலைத்தளத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான ஆவணங்கள் இணைக்கப் பட்டிருப்பதானது மிகப் பெரிய சாதனை தான். இதற்காக கடுமையாக இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலாக உழைத்தவர்களின் பணி வியந்து போற்றுதலுக் குரியது. வாசிப்பு மனிதர்களை முழுமையாக்கும் இயந்திரகதியில் இயங்கும் எம்மவர்கள் வாசிப்பதற்கு நேரத்தை தேடுவதற்கும் ஒதுக்குவதற்கும் போராடிக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் நூலகம் வலைத்தளம் அரிய சேவையை மேற்கொண்டு வருகிறது. தமிழர்கள் பூமிப்பந்தெங்கும் சிதறுண்டு வாழும் இக்காலத்தில் அவர்களுக்குத் தேவைப்படும் அரிய சில நூல்களையாவது இலகுவாக பார்வையிடவும் படிக்கவும் நூலகம் வலைத்தளம் சிறப்பாக வழிவகை செய்திருப்பதானது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகின்றது. ஆய்வாளர்கள், விமர்சகர்கள் தமது படைப்புகளுக்கு தேவைப்படும் உசாத்துணை நூல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு எவரது தயவையும் எதிர்பார்க்காமல் நேரடியாக தொடர்புகொள்ளவும் நூலகம் வலைத்தளம் உதவுகின்றது. நூலகம் கொழும்பு அணியினர் 'நூலகம் 10,000' எனும் நிகழ்வினை கொழும்பில் சமீபத்தில் சிறப்பாக நடத்தினார்கள்.தமிழ்கூறும் நல்லுலகம் இந்த தன்னார்வத்தொண்டர்களை கவனத்தில் கொள்வதானது தமிழுக்கு மட்டுமல்ல அறிவுலுகத்திற்கும் கனதியான பெருமதியை வழங்கும்.

நன்றி : வீரகேசரி 24.06.2012

படைப்பாக்கப் பொதுமங்கள்

நூலக நிறுவனம் வெளியிட்ட *படைப்பாக்கப் பொதுமங்கள்: எழுத்தாளர்களுக்கான அறிமுகம்* என்ற நூலின் சில பகுதிகள்

படைப்பாக்கப் பொதுமங்கள் (கிரியேட்டிவ் காமன்சு - Creative Commons) என்பது ஆக்கங்களை சட்டப்படி மற்றவரோடு பகிர்ந்துகொள்ளலை ஊக்குவிப்பதையும் விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு இயங்கும் இலாபநோக்கற்ற அறக்கட்டளை ஆகும். இது 2001 இல் லோறன்ஸ் லெசிக் என்பவரால் தொடங்கப்பட்டது.

இது படைப்பாளர்களுக்கும் பயனர்களுக்கு இடையேயான ஒரு பாலமாக அமைகிறது. படைப்பாக்கப் பொதுவெளி உரிமங்கள் அனைத்து உரிமைகளையும் கட்டுப்படுத்தாமல், அளிப்புரிமையை ஊக்குவிக்கின்றன. எந்த உரிமையை அளிப்பது என்பது (அதாவது முழுவதையும் காப்புரிமைக்கு கட்டுப்படுத்தலில் இருந்து முழுமையாகப் பொதுவில் விடுதல் வரையான பல்வேறு தெரிவுகள்) படைப்பாளர்களுக்குச் சாத்தியமாகின்றது. இது முழுமையான கட்டற்ற படைப்பு உரிமங்களுக்கும் முழுமையான காப்புரிமை உரிமங்களுக்கும் இடைப்பட்ட ஒரு மிதவாதத் தீர்வாகப் பார்க்கப்படுகிறது.

படைப்பாக்கப் பொதும உரிமங்கள்

இந்த நிறுவனமானது இதற்கென பல்வேறு வகையான காப்புரிமை உரிம ஒப்பந்தங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது. இவ்வுரிம ஒப்பந்தங்கள் படைப்பாக்கப் பொதுமங்களின் உரிமங்கள் என அறியப்படுகின்றன. இந்த உரிமைகள் படைப்பாளர்கள் அவர்கள் தெரிந்தெடுக்கும், அவர்களுக்கு ஏற்ற உரிமங்களோடு தமது படைப்புக்களை வெளியிடுவதைச் சாத்தியமாக்குகின்றன. பல்வேறு தேவைகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் வெவ்வேறு வகையான கட்டுப்பாடுகளுடன் ஆறு உரிம ஒப்பந்தங்ள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆக்கப்பணி ஒன்றினை படைப்பாக்கப் பொதுமங்கள் உரிமைப்படி வழங்கும்போது தெரிவு செய்யப்படக்கூடிய முதன்மையான ஆறு உரிம ஒப்பந்த வகைகளும் கீழே பட்டியலிடப்படுகின்றன. குறைந்த கட்டுப்பாடுகள் கொண்ட உரிமத்தில் இருந்து கூடிய கட்டுப்பாடுகள் கொண்டது வரை இவை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1. குறிப்பிடுதல் (by)

படைப்பாக்கப் பொதுமங்கள் வழங்கும் ஒப்பந்தங்களில் இதுவே கட்டுப்பாடுகள் குறைந்த ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தத்தின் படி நீங்கள் உங்கள் ஆக்கத்தினை வழங்கும்போது, உங்கள் ஆக்கத்தில் மாற்றங்கள் செய்ய, பயன்படுத்த, அதனை அடிப்படையாகக்கொண்டு புதிய ஆக்கங்களை உருவாக்க அனைவருக்கும் உரிமை உண்டு. அத்தோட்டு உங்கள் ஆக்கத்தினை அல்லது மாற்றங்கள் செய்யப்பட்ட புதிய ஆக்கத்தினை வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தவும் அனுமதி உண்டு. உங்கள் ஆக்கத்தினை எது வேண்டுமானாலும் செய்யமுடியும். ஆனால் என்ன செய்தாலும் உங்கள் பெயரை குறிப்பிட்டாகவேண்டும். அதுவே இந்த ஒப்பந்தத்தின் ஒரேயொரு கட்டுப்பாடு. சுருக்கமாக

- ஆக்குநர் பெயர் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும்.
- மாற்றம் செய்தல், புத்தாக்கங்களுக்கு அடிப்படையாக பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வர்த்தக நோக்கம் கருதிய பயன்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இதே உரிமத்தினடிப்படையிலேயே பகிர்தல் நிகழவேண்டும் என்றில்லை.

2. குறிப்பிடுதல் - அதே மாதிரிப் பகிர்தல் (by-sa)



இந்த ஒப்பந்தமானது உங்கள் ஆக்கப்பணியினை மாற்ற, திருத்த, அதனை அடிப்படையாகக்கொண்டு புதிய ஆக்கங்களை உருவாக்க என்று சகலதிற்கும் மற்றவரை அனுமதிக்கிறது. புதிய ஆக்கத்தினை வர்த்தக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்த முடியும். ஆனால், அவ்வாறு பகிரப்படும் வேளையில் உங்கள் ஆக்கமோ அல்லது அதனை அடிப்படையாககொண்டு உருவாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஆக்கமோ உங்கள் பெயரை கட்டாயம் குறிப்பிடவேண்டும். அத்தோடு நீங்கள் பயன்படுத்திய உரிம ஒப்பந்தத்தை அப்படியே பயன்படுத்தவேண்டும். சுருக்கமாக

- ஆக்குநர் பெயர் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும்.
- மாற்றம் செய்தல், புத்தாக்கங்களுக்கு அடிப்படையாக பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வர்த்தக நோக்கம் கருதிய பயன்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இதே உரிமத்தினடிப்படையிலேயே பகிர்தல் நிகழவேண்டும்.

3. குறிப்பிடுதல் - வழிப்பொருளற்ற (by-nd)



உங்கள் ஆக்கப்பணியில் எந்த மாற்றமும் செய்யாமல், உங்கள் பெயரை காட்டாயம் குறிப்பிடும் வரைக்கும் வர்த்தக ரீதியான அல்லது வர்த்தக நோக்கம் அல்லாத எந்த தேவைக்காகவும் உங்கள் ஆக்கத்தினை மீள விநியோகிக்க, பகிர்ந்துகொள்ள இவ்வொப்பந்தம் அனுமதியளிக்கிறது. சுருக்கமாக

- ஆக்குநர் பெயர் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும்.
- மாற்றம் செய்தல், புத்தாக்கங்களுக்கு அடிப்படையாக பயன்படுத்துதல் அனுமதிக்கப்படவில்லை.
- வர்த்தக நோக்கம் கருதிய பயன்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இதே உரிமத்தினடிப்படையிலேயே பகிர்தல் நிகழவேண்டுமென்றில்லை.

4. குறிப்பிடுதல் - இலாப நோக்கமற்ற (by-nc)



இவ்வுரிமம் வர்த்தக நோக்கம் தவிர்ந்த தேவைகளுக்காக உங்கள் ஆக்கத்தினை திருத்த, வடிவம் மாற்ற, மீள்சுழற்சிக்குட்படுத்த அனுமதிக்கிறது. இந்த ஒப்பந்தத்திலும் உங்கள் ஆக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு புதிதாக உருவாக்கப்படும் ஆக்கத்தில் உங்கள் பெயர் குறிப்பிடப்பட வேண்டும், வர்த்தக நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியாது. ஆனால் ஒரேயொரு வித்தியாசம், உங்கள் ஆக்கம் தாங்கியுள்ள உரிம விதிகளுக்கு அமைவாகத்தான் புதிதாக உருவாக்கப்படும் ஆக்கத்தையும் விநியோகிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சுருக்கமாக

- ஆக்குநர் பெயர் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும்.
- மாற்றம் செய்தல், புத்தாக்கங்களுக்கு அடிப்படையாக பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது
- வர்த்தக நோக்கம் கருதிய பயன்பாடு அனுமதிக்கப்படவில்லை.
- இதே உரிமத்தினடிப்படையிலேயே பகிர்தல் நிகழவேண்டுமென்றில்லை.

5. குறிப்பிடுதல் - இலாப நோக்கமற்ற - அதே மாதிரிப் பகிர்தல்(by-nc-sa)

இந்த ஒப்பந்தம், மற்றவர்கள் உங்கள் ஆக்கத்தை மீள்சுழற்சிக்குட்படுத்த, மாற்றங்கள் செய்ய, தொகுக்க, உங்கள் ஆக்கத்தினை அடிப்படையாக வைத்து புதிய ஆக்கங்களை செய்ய அனுமதிக்கிறது. ஆனால் மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படும் புதிய ஆக்கம், உங்கள் பெயரை குறிப்பிட வேண்டும் அத்தோடு இதே அனுமதிகளை அப்புதிய ஆக்கமும் வழங்க வேண்டும். மற்றவர்கள் உங்கள் ஆக்கத்தினை தரவிறக்கவும் பகிர்ந்தளிக்கவும் முன்னைய ஒப்பந்தம் போன்றே இதுவும் அனுமதிக்கிறதென்றாலும், உங்கள் ஆக்கத்தில் மாற்றங்கள் செய்ய அனுமதிப்பதே இவ்வொப்பந்தத்தின் சிறப்பு. உங்கள் ஆக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்படும் ஆக்கங்களும் நீங்கள் வழங்கிய உரிமத்தினடிப்படையிலேயே அமைய வேண்டும் என்பதால் புதிய உருவாக்கங்களையும் வர்த்தகத் தேவைகளுக்காக பயன்படுத்த முடியாது. சுருக்கமாக

- ஆக்குநர் பெயர் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும்.
- மாற்றம் செய்தல், புத்தாக்கங்களுக்கு அடிப்படையாக பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வர்த்தக நோக்கம் கருதிய பயன்பாடு அனுமதிக்கப்படவில்லை.
- இதே உரிமத்தினடிப்படையிலேயே பகிர்தல் நிகழும்.

6. குறிப்பிடுதல் - இலாபநோக்கமற்ற, வழிப்பொருளற்ற (by-nc-nd)

இதுவே முதன்மையான ஆறு உரிம ஒப்பந்தங்களிலும் கட்டுப்பாடுகள் கூடியதாகும். இது மீள் விநியோகத்தை அனுமதிக்கிறது. இவ்வுரிம ஒப்பந்தம் "இலவச விளம்பர" ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில், உங்கள் ஆக்கவேலையை தரவிறக்கவும், மற்றவரோடு பகிர்ந்துகொள்ளவும் இது எல்லோரையும் அனுமதிக்கிறது. ஆனால் பகிரப்படும்போது உங்களது பெயர், உங்களுக்கான தொடுப்பு போன்றவற்றையும் வழங்க வேண்டும். பகிர்பவர்கள் உங்கள் ஆக்கப்பணியில் எந்த மாற்றமும் செய்ய முடியாது. வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தவும் முடியாது. மாற்றங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதால் இயல்பாகவே உங்கள் ஆக்கத்தினை பகிரும்போது இதே உரிம ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே விநியோகம் நிகழும். சுருக்கமாக

- ஆக்குநர் பெயர் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும்.
- மாற்றம் செய்தல், புத்தாக்கங்களுக்கு அடிப்படையாக பயன்படுத்துதல் அனுமதிக்கப்படவில்லை.
- வர்த்தக நோக்கம் கருதிய பயன்பாடு அனுமதிக்கப்படவில்லை
- இதே உரிமத்தினடிப்படையிலேயே பகிர்தல் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org